DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | ராமு |
| Father's Name | : | போத்தன் |
| Village | : | செட்டிப்பட்டி |
| Taluk | : | காரிமங்கலம் |
| District | : | தருமபுரி |
| Profession | : | VAO |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 14th day of March 2025.

1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், கீழ் குப்பம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம்வருடம் அஞ்செட்டி கிழக்கு கிராம நிர்வாக அலுவலராக அலுவலகத்தில் இருந்த போது, அஞ்செட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் போன் செய்து இவ்வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டி காவல் நிலையத்திற்கு மாலை 03.30 மணிக்கு அழைத்ததன் பெயரில் மாலை 04.00 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். அங்கு தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 2 ஆம் எதிரி அவர்களை அடையாளம் காண்பித்து வழிப்பறி வழக்கு சம்பந்தமாக 2020 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் தேன்கனிக்கோட்டை – ஒகேனக்கல் செல்லும் சாலையில் ஒரு காரை நிறுத்தி அவர் வழிப்பறி செய்ததாக கூறினார். காரில் வந்தவர்களை கத்தியைக் காட்டி மிரட்டியதாகவும் சொன்னார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். என்னுடன் என்னுடைய கிராம நிர்வாக உதவியாளர் திருமதி.செல்வி என்பவரும்

கையெழுத்து செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாக்குமூலம் கொடுத்த எதிரி வழிப்பறி செய்வதற்கு பயன்படுத்திய கத்தி மற்றும் TVS victor வாகனத்தை ஆஜர் செய்வதாக சொன்னதின் பெயரில் குந்துக்கோட்டை பாரஸ்ட் செக் போஸ்ட் அருகே உள்ள S Bend என்ற இடத்தில் ஒரு புதரில் இருந்து ஒரு கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தியை மகசரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசர் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அதிலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நிகழ்வு நடக்கும் போது மணி மாலை 05.30 மணி இருக்கும். அதன் பிறகு தேன்கனிக்கோட்டை காவலர் குடியிருப்பு அருகே அழைத்து சென்று TVS victor இரு சக்கர வாகனத்தை ஆஜர் செய்தார். அந்த வாகனத்தை மகசரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசர் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அதிலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நிகழ்வு நடக்கும் போது மாலை சுமார் 06.15 மணி இருக்கும். இவ்வழக்கு சம்பந்தமாக என்னையும் என் உதவியாளரையும் போலீசார் விசாரித்தார்கள்.

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

உங்களுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டது காவல் ஆய்வாளரா அல்லது காவலரா என்றால் காவல் ஆய்வாளர். எத்தனை மணிக்கு போன் செய்தார்கள் என்றால் மாலை 03.30 மணிக்கு போன் செய்தார்கள். எத்தனை மணிக்கு நீங்கள் காவல் நிலையம் சென்றீர்கள் என்றால் சுமார் மாலை 04.00 மணி. காவல் நிலையத்தில் போலீசார் தான் உங்களுக்கு எதிரியை அடையாளம் காண்பித்தார்கள் என்றால் சரிதான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை கைப்பட எழுதினார்களா அல்லது டைப் செய்தார்களா என்றால் அவர் சொல்ல சொல்ல கணினியில் டைப் செய்தார்கள். எவ்வளவு நேரம் அவர் வாக்குமூலம் கொடுத்திருப்பார் என்றால் சுமார் 1 மணி நேரம். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் கத்தியை எடுத்து கொடுத்த இடம் 7 கி.மீ. இருக்கும். அந்த இடத்திற்கு யார் யார் எப்படி சென்றீர்கள் என்றால் நானும் என் உதவியாளரும், காவல் ஆய்வாளரும், 2 ஆம் எதிரியும் மற்றும் காவலர்களும் சென்றோம். குறிப்பாக எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. எங்கெங்கு என்னென்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்றால் S Bend அருகே கத்தியை கைப்பற்றினார்கள்,

காவலர் குடியிருப்பு அருகே TVS victor இரு சக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அடர்ந்த காட்டுப்பகுதி என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கத்தியின் நீளம் எவ்வளவு இருக்கும், அதன் கைப்பிடியின் நிறம் என்ன என்றால் அரை அடி நீளம் இருக்கும், கைப்பிடியின் நிறம் தெரியாது. உங்கள் முன்னிலையில் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை, நீங்கள் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் உங்கள் முன்னிலையில் பொருட்களை கைப்பற்றி இருந்தால், கத்தியின் கைப்பிடியின் நிறத்தையும், வாகனத்தின் பதிவு எண்ணையும் குறிப்பிட்டு சொல்லியிருப்பீர்கள், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் உங்களால் அத விவரங்களை சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | செல்வி |
| Father's Name | : | மூக்கன் |
| Village | : | அஞ்செட்டி |
| Taluk | : | அஞ்செட்டி |
| District | : | அஞ்செட்டி |
| Profession | : | கிராம உதவியாளர் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 14th day of March 2025.

1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது அஞ்செட்டி கிழக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் வருடம் தேதி, மாதம் ஞாபகத்தில் இல்லை நான் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த போது கிராம நிர்வாக அலுவலராக அ.சா.6 ராமு பணியில் இருந்தார். அஞ்செட்டி காவல் நிலையத்தில் இருந்து கிராம நிர்வாக அலுவலரையும் என்னையும் அழைத்ததாக கிராம நிர்வாக அலுவலர் சொன்னார். அதன் பேரில் நானும், அவரும் அஞ்செட்டி காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் ஒருவர் மட்டமாக அமர்ந்திருந்தார். அவர் யாரென்று எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து போட்டார், என்னையும் கையெழுத்து போடச்சொன்னார். நானும் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்தில் மட்டமாக அமர்ந்திருந்த நபர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். சாட்சி 2 ஆம் எதிரியை காண்பித்து அவர் தான் என்று கூறினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு நான் வீட்டிற்கு போய்

விட்டேன். மற்ற விவரங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு தான் தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

நீங்கள் காவல் நிலையம் செல்லும் போது மாலை சுமார் 04.00, 04.15 மணி இருக்கும் என்றால் சரிதான். கையெழுத்து செய்து விட்டு மீண்டும் அலுவலகத்திற்கு செல்லும் போது மாலை 06.00 மணி இருக்கும் என்றால் சரிதான். 2 ஆம் எதிரி காவல் நிலையத்தில் வைத்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதில் நீங்களும் கிராம நிர்வாக அலுவலரும் சாட்சி கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான். 2 ஆம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் டைப் செய்யப்பட்ட வாக்குமூலம் அதில் தான் நீங்கள் கையெழுத்து செய்தீர்கள் என்றால் ஆமாம். அதன் பிறகு அஞ்செட்டி வனப்பகுதி அருகே உள்ள S மேடு என்ற இடத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் சென்றார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து கிராம நிர்வாக அலுவலருடன் நீங்களும் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதற்காக கையெழுத்து செய்தீர்கள் என்ற விவரம் கிராம நிர்வாக அலுவலருக்கு தெரியும் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு, நீங்கள் தேன்கனிக்கோட்டை காவலர் குடியிருப்பு அருகே வைத்து கிராம நிர்வாக அலுவலருடன் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான், அவர் போடச்சொன்னதால் கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னிட்டு, கிராம நிர்வாக அலுவலர் அவர்களை போலீசார் விசாரணை செய்தனர், நீங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு உதவியாளராக வந்திருக்கிறீர்கள் என்று போலீசாரிடம் தெரிவித்தீர்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சொல்லும் வழியில் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் இது ஒரு வழிப்பறி வழக்கு என்றும், அது சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வழக்கு சொத்து படிவங்களில் சாட்சி கையெழுத்து செய்தோம் என்று சொன்னார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தற்போது உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன் என்றால் சரிதான்.

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

காவல் நிலையத்திலிருந்து கிராம நிர்வாக அலுவலருக்கு போன்

வரும் போது நீங்கள் எங்கிருந்தீர்கள் என்றால் நான் வீட்டில் இருந்தேன். காவல் நிலையத்திற்கு எப்படி போனீர்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலகம் சென்று அங்கிருந்து கிராம நிர்வாக அலுவலருடன் காவல் நிலையம் போனேன். உங்கள் வீட்டிலிருந்து கிராம நிர்வாக அலுவலகம் எவ்வளவு தூரம் என்றால் அரை கிலோ மீட்டர். உங்களுக்கு கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து எவ்வளவு நேரத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் கிராம நிர்வாக அலுவலருக்கு தான் தெரியும். அவர் சொன்னதால் தான் நீங்கள் கையெழுத்து போட்டீர்கள் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து எல்லா கையெழுத்துகளையும் போட்டீர்களா என்றால் கொண்டை ஊசி வளைவில் வைத்து ஒரு கையெழுத்து போட்டேன். அனைத்து கையெழுத்துகளையும் காவல் நிலையத்தில் வைத்தே போட்டீர்கள் அதன் பிறகு வீட்டிற்கு போய் விட்டீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. எல்லா விவரமும் கிராம நிர்வாக அலுவலருக்கு தான் தெரியும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சி சொல்கிறீர்கள், உங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.